வட்டு பருத்தி
மற்றும்
றெடிமேட் உடைத்
தெரிவைச் செய்ய நாடுங்கள்

யோகாமணி
ஆடை அகம்

33, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00



உங்கள் ஆடைத் தேவைகளை
விரைவாக பூர்த்தி
செய்கிறாள்

யோகாமணி
ஆடை அகம்

33, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 25 புதன்கிழமை (08 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 192


# காரைநகரில் நிலக்கண்ணி

# பவுஸர் வெடித்துச் சிதறியது!

## கடற்படைச் சிப்பாய் பலி

## பலர் காயமடைந்தனர்

கொழும்பு, ஜூன் 8

காரைநகரில் நேற்று முன்தினம் நிலக்கண்ணி தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர்கொல்லப்பட்டார் என்றும், சிப்பாய்கள் பலர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடற்படையின் தண்ணீர் பவுஸர் ஒன்று புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி மீது ஏறியபோது அது வெடித்துச் சிதறியது என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலக்கண்ணி வெடித் தாக்குதலை விடுதலைப் புலிகள் போராளிகளே நடத்தியுள்ளனர் என்று தூரகிழக்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்தது. (ஒ-எ)

## இன்றும் நாளையும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 8

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

## தேசியப் பட்டியல் எம்.பி றொபர்ட்சனும் ராஜினாமா!

ஐ.தே.க. தேசியப்பட்டியல் எம்.பி. அலெக் றொபர்ட்சன் தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் நேற்று நேரிற்கையளித்தார்.

கட்சியைப் பலப்படுத்தவே தாம் பதவி விலகுவதாக திரு. றொபர்ட்சன் அப்போது தெரிவித்தார்.

இவர் நாளை நாடாளுமன்றத்தில் பிரியாவிடை உரை நிகழ்த்துவார்.

கடந்த சில வாரங்களில் ஐ.தே.க. தேசியப் பட்டியல் எம்.பிக்கள் மூவர் ராஜினாமாச் செய்திருக்கின்றனர் என்பது தெரிந்ததே. (ஒ-எ-6)

### பொலன்னறுவையில் நேற்று நடந்த

## விவசாயிகள் பேரணியில் பொலிஸ் அடாவடித்தனம்

பொலன்னறுவையில் நேற்று விவசாயிகள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பொலிஸார் உட்பட பல குழுக்களினால் பல தரப்பட்ட முட்டுக்கட்டைகள் போடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகள் பேரணியில் சுமந்து சென்ற பதாகைகளை பொலிஸார் பறித்து கிழித்தெறிந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பேரணியில் கலந்து கொண்ட விவசாயப் பிரதிநிதிகள் பலரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலன்னறுவை மாவட்ட சுதந்திரக் கட்சி எம்.பி. மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (ஒ-எ-6)

## மேல்மாகாண அமைச்சர் குணசேகர பதவி நீக்கம்

மேல் மாகாண சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் பிரேமரத்ன குணசேகர ஆளுநர் எஸ். சர்வானந்தாவினால் நேற்று முன்தினம் பதவி நீக்கம் செய்யப்பட்டார் என அறிவிக்கப்படுகிறது.

முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. குணசேகராவுக்கும் இடையே தோன்றிய கொள்கை முரண்பாடு காரணமாகவே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

முன்பதாக அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்யும்படி குணசேகராவை, முதலமைச்சர், ஆளுநர் மூலம் கோரியிருந்தார். அதற்கிணங்கவே குணசேகரா பதவி வகை மறுத்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

## பிரேமச்சந்திரா தலைமையில் நேற்று அவசரக் கூட்டம்

### 17 உறுப்பினர்களில் 8 பேரே சமுகம்

மேல் மாகாணசபையில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களின் அவசரக் கூட்டம் ஒன்று முன்னணியின் பொதுச் செயலாளரும் வடமேல் மாகாண முதலமைச்சருமான ஜி. எம். பிரேமச்சந்திரா தலைமையில் நேற்று நடைபெற்றது.

மேல்மாகாண சபையில் உள்ள 17 ஜ.ஐ.தே.மு. உறுப்பினர்களில் எட்டுப் பேரே இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாகாண அமைச்சரவையில் இருந்து பிரேமரத்னா குணசேகராவை முதலமைச்சர் நீக்கியதைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்று இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

முன்னணியின் உறுப்பினர்கள் எவரும் மேல் மாகாண சபையில் எப்பதவியையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் —

அதனை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேல் மாகாண சபை நிலைவரம் மேலும் ஆராய்வதற்காக முன்னணியின் செயற்குழு எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்குக் கூடவுள்ளது. (ஒ-எ-6)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 110 தினங்களே!

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 114 தினங்களே உள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எட்டியாந்தோட்டையில் கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவே ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவார். அவர் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்றும் பிரதமர் தெரிவித்தார். (இ-எ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்க அலுவலக வளவில் குண்டுகள்

திருகோணமலையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமைக் காரியாலயத்துக்குப் பின் புறமாக புதைத்து வைக்கப்பட்டிருந்த மிகச் சக்தி வாய்ந்த ஏழு குண்டுகளும் ஆயிரத்து 305 ரவைகளும் படையினரால் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

### வத்தளை அமைப்பாளர் மாற்றம்

## சு.க. தலைமை அலுவலகத்தை ஆதரவாளர் சுற்றிவளைப்பு!

### நீலநிறக் கொடிகளுடன் அவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 8

வத்தளைத் தொகுதியின் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் பதவியில் இருந்து திரு ரூபசிங்கா நீக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக 2 ஆயிரத்திற்கு அதிகமான கட்சி ஆதரவாளர்கள் கொழும்பில் சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தை நேற்று முன்தினம் நண்பகல் சுற்றிவளைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆதரவாளர்கள் தங்கள் கைகளில் நீலநிறக் கொடிகளை ஏந்திய வண்ணம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கட்சிக்கு அர்ப்பணிப்புடன் வேலை செய்த ரூபசிங்காவுக்குப் பதிலாக சட்டத்தரணி பொனிபஸ் சில்வாவை நியமித்தது வத்தளையில் உள்ள கட்சி அபிமானிகளுக்குச் செய்யப்பட்ட அநியாயமாகும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

தொகுதி அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்படுவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் நெருக்கடி நிலை தோன்றியிருப்பதாகவும் —

அதிருப்தியுற்ற ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கானோர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலையில பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

பொன்னாலைக் கடற்பகுதியில் நேற்று மாலை 6-45மணியளவில் ஸ்ரீலங்காக் கடற்படையின் பீரங்கிப் படகுகளில் இருந்து மக்கள் குடியிருப்புகள் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ-எ)

## பத்திரிகையாளர் இங்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்தின் கொழும்புப் பிரதிநிதி திரு வைசாலி சமாதி, பி.பி.ஸி. நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளர் திரு. ஜோர்ஜ் ஆனி ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் ஒரு வார காலம் இங்கு தங்கியிருந்து பல பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்ப்பதோடு, மக்களையும் சந்திப்பர்.

இவர்கள் நேற்று பருத்தித்துறை வந்த "ரோபா" கப்பல் மூலம் இங்கு வந்தனர். (அ 173-137)

### மூச்சந்தி முனி



மந்திரி பதவி கிடைக்க முந்தியே உவர் மகாவலியார் தன்ரை பவரைக் காட்டத் தொடங்கி விட்டார் [illegible] யளே......!

## அமைச்சரவை மாற்றம் அடுத்த வாரத்திலாம்!

கொழும்பு ஜூன் 8

அமைச்சரவை மாற்றம் அடுத்த வாரம் இடம் பெறும் என்றும் —

காமினி திஸநாயக்கா, காமினி ஜயவிக்ரம பெரேரா, றொனி டி மெல் ஆகியோர் புதிதாக அமைச்சர்களாக நியமிக்கப்படுவர் என்றும் —

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள "சண்டே ஒப்சேர்வர்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

## கொழும்பில் மாணவரின் பேரணியில் எம்.பிக்கள்!

கொழும்பு, ஜூன் 8

கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேதக் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்படும் என்ற உறுதிமொழியை மீறியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்று கொழும்பு வார்ட் பிளேஸில் உள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் முன்னால் நடத்தப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவை மற்றும் எதிரணி எம்.பிக்களின் பங்களிப்புடன் இந்த ஆர்ப்பாட்ட பேரணி நடத்தப்பட்டது.

ஆயுர்வேதக் கல்லூரி முன் தற்போது நடந்து வரும் தொடர் சத்தியாக் கிரகத்தில் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் பிரதிநிதிகளும் நேற்று முதல் கலந்து கொள்ள இருந்தனர். (உ-எ-6)

### வலயம் -2 இல் இருநேரப் பாடசாலை

## பணிப்பாளர் ஆலோசித்து நல்ல முடிவு எடுப்பார்

யாழ்ப்பாணம், ஜூன் 8

தற்போது இருநேரப் பாடசாலைகளாக இயங்கி வரும் யாழ். வடக்கு வலயப் (வலயம் - 2) பாடசாலைகளை ஒரு நேரமாக இயங்கச் செய்ய வேண்டும் என ஒரு பகுதியினரால் விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கை குறித்து தாம் ஆலோசித்து நல்ல முடிவு செய்யவிருப்பதாக வடக்கு வலயப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து நேற்று முற்பகல் யாழ் திரும்பிய திரு கந்தசாமியை நேற்று மாலை தொடர்பு கொண்டு—

இருநேரப் பாடசாலை விவகாரம் குறித்துக் கேட்டபோது அவர் கூறியதாவது:-

ஒருநேரப் பாடசாலையை இருநேரமாக இயக்குவது பற்றிய முடிவு அதிபர்கள் கூட்டத்திலேயே ஏகமனதாக எடுக்கப்பட்டது. அந்த முடிவுக்கு இணங்க கடந்த ஒரு மாதகாலத்துக்கும் அதிகமாக வடக்கு வலயப் பாடசாலைகள் பிரச்சினையின்றி இயங்கி வந்தன.

இருநேரப் பாடசாலை முறை நல்ல பெறுபேறுகளைத் தருவதாகவும் இருந்தது.

வடக்கு வலயத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்களை அவர்களின் பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசத் (4ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை மீதான வழக்கு மீள் விசாரணைக்கு அனுமதி!

### இம்முறை ஐந்து நீதியரசர்கள் விசாரிப்பர்

கொழும்பு, ஜூன் 8

முன்னர் உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடிசெய்யப்பட்ட, ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரும் தமது அடிப்படை உரிமை மீறல் மனுவை, ஐந்து உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய வேண்டும் என்று உதவி லஞ்ச ஆணையாளர் விஜய ஹெட்டியாராச்சி சமர்ப்பித்த விண்ணப்பத்தை —

மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் நேற்று ஏற்றுக்கொண்டது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுமீதான விசாரணை செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, பிரியந்த பெரேரா, கலாநிதி ரஞ்சித் அமரசிங்கா ஆகியோர் நேற்று அறிவித்தனர்.

பிரதி லஞ்ச ஆணையாளராகத் தமக்கு பதவி உயர்வு தராது, லஞ்சத் திணைக்கள அனுபவம் இல்லாத ஒருவரை, வெளியில் இருந்து பிரதி லஞ்ச ஆணையாளராக அமைச்சரவை நியமித்ததன் மூலம், தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உதவி லஞ்ச ஆணையாளர் ஹெட்டியாராச்சி முழு அமைச்சரவைக்கும் எதிராக சமர்ப்பித்த மனுவை உயர் நீதிமன்றம் கடந்த 28 ஆம் திகதி நிராகரித்திருந்தது.

இத்தீர்ப்பை ஆட்சேபித்து, தமது மனுவை ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரும் விண்ணப்பத்தை திரு. ஹெட்டியாராச்சி கடந்த மாதம் 30 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். அந்த விண்ணப்பத்தின் மீதே மூன்று நீதியரசர்கள் குழு முன்கண்ட தீர்ப்பை வழங்கியது.

### தாய்க்கு முக்கிய இடம் தரும் வரை

## கட்சியில பதவி எதையும் சஜித் ஏற்கமாட்டாராம்

கொழும்பு, ஜூன் 8

ஹேமா பிரேமதாஸவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் பொருத்தமான இடம் கிடைக்கும்வரை, சஜித்பிரேமதாஸா கட்சியில் எந்தப்பதவியையும் ஏற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டமாட்டார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.பி.ஸி தெரிவித்தது.

சஜித் ஐ.தே.க செயற்குழு உறுப்பினராக ஜனாதிபதி நியமித்துள்ளார் என்பது தெரிந்ததே.

இன்னும் இந்நியமனத்தை சஜித் ஏற்றுக்கொண்டு கடிதம் அனுப்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை— ஐ.தே.க. செயற்குழுவின் உறுப்பினர்களாக தாங்கள் நியமிக்கப்பட்டதை ஏற்று சிறிசேனகூரே, காமினிதிஸநாயக்கா, காமினி அதுகோறளை ஆகியோர் கடிதங்களை கட்சித் தலைமைக்கு அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சபாநாயகர் அறையில் மாநாடா?

## காமினியின் செயல் குறித்து முகம்மது கவலை தெரிவிப்பு

காமினி திஸநாயக்கா கடந்த வாரம் பதவி ஏற்றபின்னர் நாடாளுமன்றத்தில் உள்ள சபாநாயகர் அலுவலகத்தில் வைத்து வெளிநாட்டுச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திய சம்பவம் குறித்து சபாநாயகர் எம்.எச். முகம்மது கவலை தெரிவித்[illegible] நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தொடர்பான நிச்சயமற்ற பதிரான எழுப்பிய சிறப்புரிமைப் பிரச்சினைக்குப் பதிலளிக்கையிலேயே சபாநாயகர் தனது கவலையை வெளியிட்டார்.

"காமினி திஸநாயக்கா அச் செய்தியாளர் மாநாட்டை எனது அலுவலகத்தில் நடத்திய போது நான் அங்கு இருக்கவில்லை. இது போன்ற செயல்களுக்கு எதிர்காலத்தில் நான் இடமளிக்கமாட்டேன்" — என்று சபாநாயகர் கூறினார்.

சபநாயகர் அறையில் எம்.பி. ஒருவர் செய்தியாளர் மாநாட்டை நடத்துவது முறையான செயலாகுமா? என்று திரு. பதிரான, தமது ஒழுங்குப் பிரச்சினையில் கேட்டார். (உ-எ)

### தனியார் முகவர்கள்

## மருந்து வகைகள் எடுத்துவர இனி புதிய நடைமுறை!

யாழ். மாவட்டத்தில் விற்பனை செய்வதற்காக கொழும்பில் இருந்து மருந்துப் பொருள்களை எடுத்துவருவதற்கு புதிய நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தனியார் முகவர்கள் நேரடியாக பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்று மருந்துப் பொருள்களை எடுத்து வந்தனர்.

இனிமேல் மருந்துவகைகளை கொழும்பில் இருந்து எடுத்துவர விரும்பும் தனியார் வர்த்தகர்கள் யாழ் அரச அதிபர், பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆகியோரின் சிபார்சுக் கடிதத்தை பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது.

இந்த நடைமுறை தொடர்பான அறிவுறுத்தலை பாதுகாப்பு இணைப்புக்குழு யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கைமாறிய லப

கடந்த 31ஆம் திகதி தான் டிக்குளத்தில் பருத்தித்துறை பெண்மணி ஒருவரிடம் அல் பம் அடங்கிய லப கைமாறி விட்டது. அவரது பொருள் எம்மிடம் உண்டு. உரியவர் தொடர்பு கொள்ளவும்: மா. பேரின்பநாயகம், 212/1, கோயில் வீதி, நல்லூர். [கைலாசபிள்ளையார் கோயி லடி]. [31310]

### விற்பனைக்கு

3½'x6' கேப்பு அலுமாரி ஒன்றும், "போனெக்ஸ்" ஸ்போட்ஸ் சைக்கிள் ஒன் றும் விற்பனைக்குண்டு. 413, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [31295]

அடைகாக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பண் டம், வாத்தகோழி முட்டை கள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ செண்ரர், 19, முரு கேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31307)

Prima Broiler கோழிக்குஞ்சு கள் உடன் பெற்றுக்கொள்ள லாம். நல்லூர் வீடியோ சென் ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல் லூர். [31308]

### தேவை

குரக்கன், சோளா தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்: அண்ணா பரம், இணுவில் (ஜி-8258)

### மணமகன் தேவை

மிருகசீரிடம் முன்வரை அக்கத்து அத்தம் நட்சத்திர மணமகனை, நன்கு படித்த, அழகிய குற்றமற்ற மணமக ளுக்கு பெற்றோர் தேடுகி றார்கள். வயது வித்தியாசம் 40-45, ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். இல. 656, மே/பா உதயன், யாழ்ப் பாணம். [31303]

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி - நல்லூர் வீதி நவீன வசதிகள் அரச அலு வலகங்கள், பிரபல பாட சாலைகள், கோயில்கள், மாக் கற் போக்குவரத்துள்ள பாது காப்பான சூழல் இடம் பெயர்ந்தோருக்கு முன்னு ரிமை: P. S. திருச்செல்வம், 52, செம்மணி வீதி, நல்லூர். (31306)

அராலி வீதி சங்கானையில் 8 பரப்பு காணியோடு பெரிய வீடு விற்பனைக்குண்டு. ஏற்றுப் பக்கமாக வளவுக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: V. N. பொன் னுத்துரை (ஓவசியர்) சரந் தன், அராலி வீதி, சங்கானை. (7224)

### வீடு வாடகைக்குத் தேவை

A/L படிக்கும் மகனுக்கும் தாய்க்கும் சாவகச்சேரி நல்லூர் றோட், அத்தியடி, ஆனைப் பந்தி, நல்லூர், சந்தர்யடம் ஆகிய இடங்களில் விரும்பத் தக்கது. ஜெயநாதன் ரூபன், இல. 5, கண்ணார லேன், நல் லூர். (31296(

### சனிநீராடு

ஒலிவ் ஸ்நானப்பவுடர் சுகந்தருவது. தேர்ந்தெடுத்த சரக்குகள் மூலிகைகள் மட் டுமே கொண்டு தயாரித்தது. சிரசுக்கும் கண்களுக்கும் உடம் புக்கும் இதமளிப்பது. உச்சப் பயனுக்கு கொதிநீரில் ஊற வைத்துப் பாவிக்கவும். பக்கற் ஒன்று ரூபா 3-. 25 பக்கற் கொண்ட அட்டை ரூபா 60/-. அண்ணாகோப்பிக் கடைகளி லும் விற்பனைக்குள்ளது. "மிக்ஸவா". [ஜி-8419]

### NOW AVAILABLE

Easy Latin Expressions with English & Tamil Translation by: T. M. Antonipillai L. L B (Cey), Attorney, at - Law, Author of Easy English, Containing Grammar Letter writing and Comprehension. (31267)

### திருத்துதல்

சகல மணிக்கூடுகள், றேடி யோக்களை உத்தரவாதத் துடன் திருத்திக்கொள்ள டிக்கா வட்ச் அன்ட் றேடியோ வேக்ஸ், ஆறுகால்மடம், மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டை, சண்டி வீதி, சாவ கச்சேரி. தலைமையகம் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பா ணம். [ஜி-8257)

### புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் துரித மீட்டல் வகுப்புகள் 12-06-94 சனி பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகும். கணி தம்: திரு. மு. கனகசுந்தரம், தமிழ்: திரு. த. அம்பிகை பாகன். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப் பாணம். [31281]

## முனகதீன் நேற்று பதவிப் பரமாணம்

கொழும்பு, ஜூன் 8

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸ் எம்பியாக யு. எல். எம். முனகதீன் நேற்று நாடாளு மன்றத்தில் பதவிப் பிரமா ணம் செய்து கொண்டார்.

பதவி விலகிய ஜனாப் எம். எச். எம். அஷ்ரபின் இடத்துக்கே இவர் எம்.பியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். (இ-எ)

## பதவி வெற்றிடம்

பதவி:

தட்டெழுத்தாளர் / எழுதுநர் (தமிழ்) 304/08

தகைமைகள்:

க. பொ. த. ப. (உ/த) (வர்த்தகப் பிரிவில் சித்தியுடன் தட்டெழுத்துத்துறையில் அனுபவம் பெற்றமைக்கான சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 25 — 06 — 1994

வயதெல்லை:

18 வயதிற்கும் 45வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சம்பளத்திட்டம்:

1005 — 1705

40X5 — 50X10

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் காரியாலய நேரத்தில் விண்ணப்பப் படிவங்களை ரூபா 10/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை காரியால யத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
75/1, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(ஜி-8422)

உ
ஸ்ரீராமஜயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கர பரமாசாரிய சுவாமிகளின் ஆசியினால் நிகழும் மங்களகரமான பவ வருஷம் வைகாசி மாதம் 27ஆம் (10-06-1994) நாள் வெள்ளிக்கிழமை சித்தயோகமும் மிருகசீரிஷ நட்சத்திரமும் கூடிய நன்பகல் 12மணி முதல் 12-26 மணி வரை உள்ள சிம்ம லக்கின

★ சுப முகூர்த்தத்தில் ★

சுழிபுரம்
சிவஸ்ரீ பி. பா. தியாகராஜக்குருக்கள் தம்பதிகளின் புத்திரி
சௌபாக்கியவதி
**நிரஞ்சனிதேவி**
அவர்களை

திருகோணமலை
சிவஸ்ரீ சு. ஷண்முகரத்தினசர்மா தம்பதிகளின் புதல்வன்
சிரஞ்சீவி
**ஜனார்த்தனேஸ்வரசர்மா**
அவர்களுக்கு

பாணிக்கிரஹண கன்னிகாதான திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள் யாவரும் குடும்பத்தவருடன் வந்து மண மக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பாளர்கள்:


வேதாகமமாமணி சோ. ரவிச்சந்திரக்குருக்கள்
சா. கணேசசர்மா தம்பதிகள் (வட்டுக்கோட்டை)
பா. தி. கணேசசர்மா (சுவிஸ்)
பா. தி. பாலசுப்பிரமணிய சர்மா (சுவிஸ்)

சிவஸ்ரீ பி. பா. தியாகராஜக்குருக்கள், தம்பதிகள், (சுழிபுரம்), காளிகோயிலடி, திருகோணமலை.

சிவஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா தம்பதிகள், (எஸ். எஸ். சர்மா), 75, கண்டிசன் வீதி, திருகோணமலை.

[ஜி-8421]

## நினைவுடன் கலந்து முடிந்துவிட்ட 7-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலிகள்





**சற்குணநாதன்**
பிறப்பு: 1958 — 07 — 23
அழிப்பு: 1987 — 06 — 08

**சிவானந்தகுரு**
பிறப்பு: 1944 02 — 08
அழிப்பு: 1987 — 06 08

தம்பி சற்குணம் சண்டாளர்கள் உன்னைச் சடுதியாக வெட்டி சாய்த்தனரோ அல்லது அரைகுறையாய் சுட்டுப் பொசுக்கினரோ உனக்கு ஏற்பட்ட துயர் அறிந்து உன் உடலை மீட்டிங்கு கொண்டு வர நினைத்துடன் சீறிச் சென்ற சிவானந்த குருவான உனது அத்தானையும் சின்னப்புத்தி கொண்ட சிங்களக் காடையர் வெட்டிச் சாய்த்தனரோ......? அல்லது அரைகுறையாய் சுட்டுப் பொசுக்கினரோ இன்றும் உங்கள் பொன்னுடலுக்கான ஏங்கி நிற்கின்றோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்மன் அருள் புரியட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சகோதரர்கள், தையிட்டி, காங்கேசன்துறை.
தற்போதைய முகவரி: அம்மன் கோயிலடி, ...
மனைவி, பிள்ளைகள், ஏழாலை வடக்கு, ...

[7225]

## ஐந்தாவது பிறந்த நாள் வாழ்த்து

### ❋ செல்வன் கு. கணேசானந்தா ❋

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த குகதாஸன் - இராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கணேசானந்தா இன்று 08-06-1994இல் 5ஆவது பிறந்தநாளை தனதில்லத்தில் சிறப்பாகக் கொண்டாடு கிறார்.

இவரை அன்பு அம்மா, அக்கா சிந்துஷா, சரந் தன் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா (சுவிஸ்), அக்காமார், சரசாலைப் பெரியப்பா, பெரியம்மா, வல்வெட்டி பெரியமாமா, அத்தை, அத்தான், பத்த மேனிப் பெரியப்பா, சித்தி, அண்ணாமார், தம்பிமார், சுவிஸ் சின்னமாமா, பனை சின்னத்தை, ஐயா, அம் மம்மா மற்றும் நீர்வேலியிலிருக்கும் மாமாமார், அத்தைமார், மச்சாள்மார், அத்தான்மார், அண்ணா மார், உற்றார், உறவினர்கள் கணேசானந்தாவை சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

திருமதி குகதாசன் (அம்மா)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(31292)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 20 — 10 — 1931

மறைவு: 09 — 05 — 1994

**அமரர் இராசரத்தினம் சத்தியமூர்த்தி**
(முன்னாள் நஷனல் கிறின்லீஸ் வங்கி லிகிதர்)

எங்கள் குடும்பத்தலைவரின் மறைவின் போது எங்கள் துயரில் பங்குபற்றியோருக்கும் பல வழிகளி லும் உதவிபுரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரி வித்துக்கொள்வதுடன் இன்று 8 6 94இல் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து கொள்ளு மாறு வேண்டிக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

செம்பாடு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(31302)

சமூக சேவை நிதிக்காக
**யாழ். மாவட்ட லியோ கழகங்கள்**
இணைந்து வழங்கும்

## மாபெரும் கலை விழா

இடம்: யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்

காலம்: **08-06-1994** பி.ப. 4 மணி

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் க. குணரத்தினம் (யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்)

சிறப்பு விருந்தினர்:
லயன் S P. சிவஞானம் (முன்னாள் வலயத் தலைவர்)

1) புஸ்பாஞ்சலி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி லியோ கழகம்)
2) ராகம், தாளம், பல்லவி (யாழ்.பரியோவான் கல்லூரி லியோ கழகம்)
3) சுப்பர் சோனிக் சுகிஸ் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகம்)
4) பாரதி கண்ட உலகம் - புதிய ஆக்கம் (யாழ் இந்து மகளிர் கல்லூரி லியோ கழகம்)
5) வில்லிசை 'வெளிநாடு வேண்டுமா ?' (யாழ். மத்திய கல்லூரி லியோ கழகம்)
6) நாடகம் 'கூடு விட்டு' (யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை லியோ கழகம்)
7) இந்துவின் இன்னிசை இரவு (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி லியோ கழகம்)

அன்பளிப்பு:

**25/- 50/- 100/- 250/-**

பிரவேசச் சீட்டுக்களை மண்டப நுழைவாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ். மாவட்ட லியோத் தலைவரும்
யாழ். மாவட்ட லியோ கழகங்களும்

கலை நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துபவர்கள்:

**றஞ்சனா வண்ண ஆடையகம்**
(றஞ்சனாஸ்)
17,18,18A, சிறப்பு அங்காடி யாழ்ப்பாணம்
(31314)

உ
சிவமயம்

## பின்போடப்பட்டது

முன் அறிவித்தபடி

10 - 6 - 94, 11 - 6 - 94, 12 - 6 - 94, 13 - 6 - 94 சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலில் நடைபெற இருந்த

### சேக்கிழார் விழா

எதிர்பாராத காரணங்களால் பின்போடப்பட்டது. மறு திகதிகள் அறிவிக்கப்படும்.

சேக்கிழார் நாயனார் குருபூசை

13 - 6 - 94 திங்கட்கிழமை காலை 9. 00 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறும்.

சேக்கிழார் மன்றம்

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய்.

(ஜி/5701)

## கருத்துரைத் தொடர் - 06

தலைப்பு:- சர்ச்சைக்குரிய கச்சதீவு கடற்பிராந்தியம் ஒரு நோக்கு

வழங்குபவர்:- A. S சூசை ஆனந்தன் (விரிவுரையாளர், புவியியற்றுறை)

காலம்:- 08 - 06 - 1994 புதன்கிழமை

இடம்:- புவியியற்றுறை விரிவுரை மண்டபம் இல:- 02

-புவியியற் கழகத்தினர்

யாழ். பல்கலைக் கழகம்

(ஜி/8429)

கணபதிதுணை
உரும்பிராய்
ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய

## வருடாந்த மஹோற்சவம்

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 09-06-94 | முற்பகல் | 10-00 |
| மஞ்சம் | 18-06-94 | இரவு | 8-00 |
| திருவிளக்கு பூசை | 20-06-94 | இரவு | 7-00 |
| சப்பறம் | 21-06-94 | இரவு | 8-00 |
| தேர்த்திருவிழா | 22-06-94 | முற்பகல் | 9-00 |
| தீர்த்தத்திருவிழா | 23-06-94 | முற்பகல் | 9-30 |
| பூங்காவனம் | 24-06-94 | பிற்பகல் | 6-00 |
| வைரவர் பொங்கல் | 28-06-94 | பிற்பகல் | 4-00 |

தினமும் மாலை 5-00 மணி முதல் 6-00 மணி வரை

தெய்வீக பேருரை

விடயம்: விநாயக புராணம்

நிகழ்த்துபவர்: திரு. த. சிவகுமாரன் (அமைப்பாளர் - காரைநகர் கம்பன் கழகம்) ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

உபயகாரர்,
பரிபாலன சபையினர்.

(31311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
[illegible] நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

## தூரத்தே இருந்து கொல்லும்படை!

ஸ்ரீலங்கா படையினர் நடத்தும் எறிகணைவீச்சு, குண்டு வீச்சு, பீரங்கித் தாக்கு ஆகியவற்றால் அப்பாவிப் பொதுமக்கள் மரணமாவது ஒன்றும் புதிய செய்தி அல்ல. பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், வழிபாட்டு இடங்கள் என்பனவற்றில் வைத்து மேற்கூறிய தாக்குதல்களால் பொதுமக்கள் கொல்லப்படுவதும் இப்போது பரபரப்பான செய்தி என்ற தரத்தை இழந்துவிட்டது.

இதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். விடுதலைப் புலிகளைத் தாக்குவதாகக் கூறிக்கொண்டு, அவர்களின் முகாம்களைச் சேதப்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு, கடந்த நான்கு வருடங்களாக அப்பாவித் தமிழ் மக்களே கொல்லப்படுகின்றனர். அவர்களின் சொத்துக்களே, குடியிருப்புகளே நாசமாக்கப்படுகின்றன.

இந்த வகையில் நோக்கும்போது, மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் செலுத்திய எறிகணை, சங்கானைப் பகுதியில் உள்ள அகதிமுகாம் ஒன்றைச் சேதப்படுத்தி, அங்கு குடியிருந்த அகதி ஒருவரைக் கொன்றும் மற்றும் பலரைக் காயப்படுத்தியும் விட்ட சம்பவம் சிறிதாகவே தெரியும்.

இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன அல்லது வழமையாகிவிட்டன என்பதனால் அவற்றைப் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது. மாதகல் பகுதியில் இருந்து முன்னேறுவதற்கு இராணுவத்தினர் எடுத்த முயற்சிக்கு முன்னோடியாகவே எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றிருக்கிறது. அந்தத் தாக்கு அகதி முகாமைக் குறிவைத்தே நடத்தப்பட்டிருக்கிறது.

இராணுவம் முன்னேற முயற்சிப்பதற்கும், அகதி முகாம் மீது குறிவைப்பதற்கும் என்ன தொடர்பு? இராணுவம் முன்னேறப் போகிறது அல்லது குறிப்பிட்ட பகுதியைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் போகிறது என்றால் அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்லப் போகிறது; மக்கள் உடைமைகளை நாசமாக்கப் போகிறது என்பதேயாகும்.

குடாநாட்டின் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்ட இராணுவம் அதனை உடனடியாகவே செயற்படுத்துவது தடைப்பட்டுள்ளது.

பெரும் தாக்குதல் என்பது குடாநாட்டில் மிகப்பெரும் மக்கள் அழிவை மட்டுமன்றி இராணுவத் தரப்பிலும் பேரிழப்பை உண்டாக்கும் என்பதால் ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் அதனை விரும்பவில்லை. குடாநாட்டில் பெரும் தாக்குதலை நடத்தி இராணுவத்தினர் அதிக எண்ணிக்கையில் மரணமானால், சிங்கள மக்கள் யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு கிளர்ந்தெழுவார்கள். தேர்தல் நெருங்கும் காலத்தில் சிங்கள மக்களின் எதிர்ப்பைத் தேடுவது விவேகமல்ல. வாக்குகளை இழக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது என்று அவர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்கள்.

எனவே அங்கிருந்து உத்தரவு எதுவும் வராத நிலையில், தாமும் இருக்கிறார்கள் என்பதனைக் காட்டிக் கொள்வதற்காக இடைக்கிடை எறிகணை வீச்சு, குண்டு வீச்சு, பீரங்கிக் கப்பலிலிருந்து தாக்கு என்று படையினர் "நொட்டுவார்கள்" என்பது வெளிப்படை. தாம் முன்னேறப் போவதாகவும் காட்டிக் கொள்வார்கள்.

அந்த நொட்டுதல்களின் போது எவ்வளவுக்கு எவ்வளவு அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்ல முடியுமோ, அவர்களின் உடைமைகளைச் சேதப்படுத்த முடியுமோ அதனைச் செய்வதே இராணுவத்தினரின் போக்கு என்பது புலனாகிறது.

தாம் தூரத்தே உள்ள முகாம்களில் முடங்கியவாறு அங்கிருந்துகொண்டே தாக்குதல்களை நடத்துவதன் மூலம் தமது தரப்பில் இழப்புகளைத் தவிர்த்து, தமிழ்ப் பொதுமக்களைக் கொல்லலாம் என்ற உத்தியையும் அவர்கள் கையாளுகின்றார்கள். நிராயுதபாணிகளைத் தூரத்தே இருந்து கொல்வது தான் ஸ்ரீலங்காப்படைகளின் "யுத்த தர்மம்" ஆகிவிட்ட பின்னர் அவர்கள் வேறு என்ன செய்வர் என்று எதிர்பார்ப்பது?

# தினமும் நடக்கும் பீரங்கித்தாக்குதல்களால்
# வடமராட்சியில் கடற்றொழில் பாதிப்பு!

வல்வெட்டித்துறை, ஜூன் 8

வடமராட்சிப் பகுதியில் கடற்படையினர் நடத்தி வரும் பீரங்கித் தாக்குதலினால் கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை இருந்து வருகிறது.

கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கூறிக்கொண்டு அரசு கடந்த ஜனவரி மாதம் முதல் கடற்றொழிலாளர் நிவாரண உணவு முத்திரைகளை இடைநிறுத்தியது.

எனினும் கடற்படையினர் கடற்றொழிலாளர்களை தொடர்ந்து தாக்கி வருவதால் கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை இருந்து வருகிறது.

கடற்றொழிலாளர்கள் தொழிலும் இன்றி, நிவாரண உணவு முத்திரையும் இன்றி பட்டினி நிலையில் இருப்பதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் ஒன்றியச் செயலாளர் திரு. த. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த காலப் பகுதியில் வடமராட்சி வடக்கில் கடற்றொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கை 3,650 ஆக இருந்தபோதிலும், கடற்றொழில் அமைச்சினால் 2,500 குடும்பங்களுக்கு மாத்திரமே நிவாரண உணவு முத்திரைகள் வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடற்றொழிலாளர்களின் அவல நிலை குறித்து யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர் அனுப்பி இருப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடமும் இது குறித்து தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-155)

## புலிகளின் குரல் வானொலியில்

08 - 06 - 1994
புதன் இரவு

★ 8-01 — குயிலோசை "மண்காக்கும் மைந்தன்"
★ 8-20 — ஏர்முனை "தன்னிறைவுத் தானியங்கள்"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் "எதிரொலி"

09 - 06 - 1994
வியாழன் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கீதங்கள் தொடர்ச்சி

# தமிழ் குழுவினர்- பொலீஸார் வவுனியாவில் மோதல் நிலை

## இருதரப்பினரும் துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு, ஜூன் 8

வவுனியா நகரில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை தமிழ் அமைப்பு ஒன்றைச் சேர்ந்த சிலருக்கும் பொலீஸாருக்கும் இடையே ஏற்படவிருந்த மோதல் பொலீஸ் அதிகாரியின் தலையீட்டால் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்று மாலை அந்த அமைப்பின் உறுப்பினர் ஒருவர் தலைக்கவசம், லைசென்ஸ் மற்றும் தேவையான தஸ்தாவேஜுகள் இன்றி மோட்டார் சைக்கிளில் வவுனியா வீதியால் வந்து கொண்டிருந்தபோது காவல் நிலையம் ஒன்றில் பொலீஸாரால் தடுக்கப்பட்டார் என்றும்—

அதனைத் தொடர்ந்து அந்த இடத்துக்குச் சென்ற குறிப்பிட்ட அமைப்பின் ஏனைய உறுப்பினர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும்—

உச்சக்கட்டமாக இருதரப்பினரும் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுகளை தீர்த்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தகவல் கிடைத்து அந்த இடத்துக்கு விரைந்து சென்ற பொலீஸ் அதிகாரி நிலைமை கட்டு மீறாது பார்த்துக் கொண்டார் என்றும்—

அவ்வமைப்பைச் சேர்ந்தவர்கள் பின்னர் அங்கிருந்து அகன்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த நாள் சனிக்கிழமை அதிகாலை இராணுவத்தினர் குறிப்பிட்ட சில இடங்களை சுற்றி வளைத்து, அந்த அமைப்பைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் சிலர் உட்பட அமைப்பு உறுப்பினர்கள் பலரை விசாரணைக்குக் கூட்டிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# நிதி நிறுவனங்களாக தொண்டர் நிறுவனங்கள்

## மத்திய வங்கி அங்கீகரிக்கும்

கிராமியக் கடன் வழங்கும் திட்டங்களை அமுல் நடத்தும் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களை நிதி நிறுவனங்களாக மத்திய வங்கி அங்கீகரிக்கும் என்றும்—

இதற்காக நிதி நிறுவனங்கள் சட்டம் திருத்தப்படும் என்றும் — அறிவிக்கப்படுகிறது.

நிதி நிறுவனங்கள் மீது கூடிய கட்டுப்பாடுகளைக் கொண்டுவரும் திருத்தங்களும் மத்திய வங்கியினால் அறிவிக்கப்படவுள்ளன என்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் டாக்டர் விக்கிரம வீரசூரியா தெரிவித்தார்.

இது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் அந்த அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு முடிவெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## லடிஸ் வீரமணி காலமானார்

பிரபல நாடக நடிகரான லடிஸ்வீரமணி நேற்று கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 60. (இ-எ)

# தலைவருக்குரிய தகைமையை சந்திரிகா நிரூபித்து விட்டார்

## சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 8

ஒரு தலைவருக்குள்ள தகைமைகள் தமக்கு இருப்பதை சந்திரிகா நிரூபித்துவிட்டார். மேல்மாகாண மற்றும் தென்மாகாண தேர்தல்களில் கட்சியை வெற்றிப்பாதைக்கு சந்திரிகா வழிநடத்திச் சென்றார். இவற்றின் காரணமாகவே கட்சியின் பிரதித் தலைவராக சந்திரிகாவை கட்சி ஏகமனதாகத் தெரிவு செய்தது.

சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் சில காரணங்களினால் தாம் போட்டியிட முடியாமற் போனால் சந்திரிகா குமாரணதுங்காவே போட்டியிடுவார் என்றும் அவர் கூறினார்.

"நான் நாட்டில் இல்லாத சமயங்களில் சந்திரிகாவே கட்சியின் தலைமையை ஏற்று வழிநடத்துவார்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

# வடக்கு- கிழக்கு தீர்வுக்கு அரசமைப்பில் மாற்றம்

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கொண்டுவருவதற்காக தற்போதைய அரசமைப்பை மாற்றி அமைக்கும் யோசனையை சுதந்திரக்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்டிருக்கிறார்.

இம்மாற்றம் மாகாண சபைக்கான தேவையை இல்லாது செய்து விடும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இனப்பிரச்சினை பற்றி அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வடக்கு-கிழக்குப் பிரச்சினை சிக்கல் நிறைந்த ஒன்றாகி விட்டது. இது பற்றி ஆராய்வதற்காக எமது கட்சி விசேட குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுக்களைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்று நம்புகிறோம்.

எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைத்திட்டம் சேர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாணசபை முறை கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்று வடக்கு-கிழக்கில் மாகாண சபை இயங்கவில்லை என்றும் அவர் கூறினார் (எ)

# உள்நாட்டு யுத்தம் காரணமாக 4லட்சம் சிறுவர்கள் பாதிப்பு

## மனித உரிமைகள் குழு குற்றச்சாட்டு

கொழும்பு ஜூன் 8

"உள்நாட்டு யுத்தத்தினால் 4 லட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்"

இப்படி சட்ட சமூக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமை பற்றி விசாரணைகள் மேற்கொண்ட சட்ட, சமூக நிறுவனம் அரசுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் கடந்த வியாழக்கிழமை இந்த அறிக்கையை அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜே. என். சொக்ஸியிடம் கையளித்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ பெண்களுக்கு எதிரான கற்பழிப்பு மற்றும் வன்முறைகள் தொடர்பான சட்டங்கள் செயலற்றனவாக இருக்கின்றன அல்லது போதியனவாக அமையவில்லை.

★ இலங்கையின் இனமுரண்பாடு பெரும் எண்ணிக்கையானவர்களை இடம் பெயர்ந்தவர்களாக்கியுள்ளது. 1993 இல் இடம் பெயர்ந்தவர்கள் எண்ணிக்கை 6 லட்சமாகும். இவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்கி வந்தபோதும் இவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் நிலைமை திருப்திகரமானதாக இல்லை.

★ கல்வி, தொழில் வாய்ப்பு, அபிவிருத்தி மற்றும் மொழி ஆகியவற்றை மருவிச் செல்லும் கடந்த கால அரசாங்கங்களின் பாரபட்சமான கொள்கைகள் நாட்டின் மிகப் பெரிய சிறுபான்மையினரான தமிழர்கள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தின.

★ கல்வி மற்றும் மொழி தொடர்பான விவகாரங்களை ஓரளவுக்கு தீர்க்க 1993 இல் [illegible] செயற்படுத்தல் போதியதாக [illegible] (இ-3)

**ஊருக்கொரு குளம் செய்வோம் பாருக்கே உணவளிப்போம்**

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் தெற்கு வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான இறுதி நிலை வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகலில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

வேம்படி மகளிர் மைதானத்தில்

★ 17 வயதுப் பிரிவு:- கனகரத்தினம் ம. ம. வி. எதிர் வேலணை துரைசுவாமி ம.ம வி. மற்றும் சுண்டுக்குளி மகளிர் எதிர் கொக்குவில் இந்து.

★ 19 வயதுப் பிரிவு:- கனகரத்தினம் ம. ம. வி. எதிர் கொக்குவில் இந்து.

சுண்டுக்குளி மகளிர் மைதானத்தில்

★ 17 வயதுப் பிரிவு:- கன்னியர் மடம் தமிழ் ம. வி. எதிர் நாவாந்துறை றோ.க. த. பாடசாலை.

★ 19 வயதுப் பிரிவு:- திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி. எதிர் வேம்படி மகளிர் கல்லூரி.

★ ★ ★

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் அதன் 52வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஈச்சமோட்டை மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐ. வி. க. அணியை எதிர்த்து நொதேன் வி. க. வெள்ளை அணி மோதும். (உ-17)

★ ★ ★

எம். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் யாழ். றொட்டராக்ற் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் அளவெட்டி விநாயகர் வி. க. அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய வி. க. அணி மோதும்.

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 'உதயன்' வெற்றிக் கிண்ணத்துக்காக கழக மைதானத்தில் — 7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் — நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4.00 மணி:- உதயதாரகை வி. க. எதிர் சுடரொளி வி. க.

★ 4.45 மணி:- ஞானமுருகன் வி.க. எதிர் வல்லை வி.க. 'பி' அணி.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

பிரட்ரிட் ஈபேட் மன்றத்தின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி கலாநிதி (செல்வி) பிறாட்லேக்கும் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கும் இடையே இன்று நடைபெறவிருந்த சந்திப்பு இம்மாதம் 13 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு பின்போடப்பட்டுள்ளதாக இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கிரேஷ் — துணைப் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

கலாநிதி பிராட்லே இதுவரை யாழ்நகர் வந்து சேராததே இச்சந்திப்பு பின் போடப்பட்டதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ)

## கப்பலில் செல்லும் நோயாளர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், ஜூன் 8

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்கென தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் கப்பலில் செல்வதற்கு நாளை வியாழன் நண்பகல் 12 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரிக்கு சமுகமளிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இரண்டு நாட்களுக்குப் போதுமான உணவு, தண்ணீருடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-15)

## தபால்களை சேர்ப்பிக்க

யாழ்ப்பாணம், ஜூன் 8

நாளை வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வரும் "பிளாம் யாஸ்" கப்பலில் தபால் பொதிகளை எடுத்துச் செல்வதற்கு வசதியாக—

இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னதாக எந்த தபால் பெட்டிகளிலும், நாளை காலை 10 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தினுள் இருக்கும் தபால் பெட்டியிலும் வெளியூர் தபால்களை சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (ஓ-162)

## இன்று

சாவகச்சேரி. ஜூன் 8

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவு நடத்தும் க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கலை, விஞ்ஞான பாடங்களுக்கான வினா விடைக் கருத்தரங்கு இன்று புதன்மாலை 4மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும். (ஓ-31)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். குடாநாட்டில் ஆங்கில மருந்து மொத்த விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். விக்டோரியா வீதியில் உள்ள வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் நடைபெறும். (எ-162)

★ ★ ★

வடமராட்சிப் பகுதியிலுள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் — விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஓ)

## நாளை நயினை அம்மன் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. 22 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்

இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த 4 வருடங்களாக தீவுப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களும் யாழ். குடாநாட்டு மக்களும் மேற்படி ஆலய உற்சவத்தில் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை முடிக்க முடியாத நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-111)

## ஆலயங்களில்

ஆனைக்கோட்டை கூழாவடி புற்றை பின்னிப் பிள்ளையார் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊஞ்சல் வைபவம் நடைபெறவுள்ளது. (க-90)

★ ★ ★

பொலிகண்டி கந்தவன ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 21ஆம் திகதி சப்பற உற்சவமும், 22ஆம் திகதி ரதோற்சவமும், 23ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-173)

★ ★ ★

தென்மராட்சி ஜூன் 8

சாவகச்சேரி கிழக்கு பெரியமாவடி ஸ்ரீ கந்தசாமி தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை காலை 10 மணிக்கும் நடைபெறும். (ஓ-117)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு வசந்தோற்சவமும், இரவு 7.30 மணிக்கு மின்[illegible] உற்சவமும் இடம் பெறும். (ஓ)

## தங்க நகை யாருடையது?

யாழ்ப்பாணம், ஜூன் 8

நாவாந்துறைச் சந்தையிலிருந்து தங்கநகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வருவாய்ப்பகுதியினர் அறிவித்துள்ளனர். (இ)

## வீரவணக்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

ஜூன்மாதம் வீரமரணம் அடைந்த மாவீரர்களின் நினைவாக வலிகாமக் கோட்ட சங்கானை வட்டத்தின் அராலி வடக்கு இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று 8 ஆம் திகதி இரவு 8.00 மணிக்கு வீரவணக்கக் கூட்டம் நடைபெறும்.

வட்டப் பொறுப்பாளர் திரு. மதி கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## பனையில் இருந்து விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கள் இறக்குவதற்காக பனை மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து மரணமானார். அரியாலையில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றது.

நாரந்தனையில் இருந்து இடம்பெயர்ந்து அரியாலை சாம்பன் குடியிருப்பில் வசிக்கும் குசை அருளப்பு (53 வயது) என்ற 7 பிள்ளைகளின் தந்தையே மரணமானவர் ஆவார். (ஓ-15)

## விளக்கு சஞ்சிகை

யாழ்ப்பாணம், ஜூன் 8

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆசிரியர் வாண்மை விருத்திக்குழுவால் திங்கள் தோறும் வெளியிடப்பட்டு வருகின்ற விளக்கு சஞ்சிகையின் மார்ச் - ஏப்ரல் இதழ் வெளிவந்துள்ளது. "கற்றுக் கொண்டே இருப்போம்" என்ற ஆசிரியத் தலையங்கத்துடன் வெளிவந்துள்ள இந்த இதழ் ஆசிரியமும் வாண்மையும், விசேடம், பாடசாலைக் கட்டமைப்பில் ஆரம்பக்கல்வி போன்ற கட்டுரைகளுடனும் வேறு பல அம்சங்களுடனும் வெளியாகியுள்ளது. (ஓ)

## உலர் உணவு விநியோகம்

இடம்பெயர்ந்தவர்களுக்கான சித்திரை மாத உலர் உணவு விநியோகம் ப. நோ. கூ. சங்கங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதுவரை பெற்ற உலர் உணவுக்கான முத்திரைப் புத்தகங்களை ப. நோ. கூ. சங்கத்தில் ஒப்படைத்தவர்களுக்கு அடுத்த இரண்டு கட்டங்களுக்கும் உலர் உணவுப் பொருள்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. இளைநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-162)

## இறைமக்கள் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

இறைமக்கள் பயிற்சி நிலைய வகுப்புக்கள் யாழ். சோமசுந்தரம் அவென்யூவில் உள்ள அதன் பணி மனையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அருட்கலாநிதி ஹென்றி வீக்ரர் இந்த வகுப்புகளை நடாத்தி வருகிறார். (இ)

**பெண்ணை விரும்பி வராது விட்டவன் பொன்னை விரும்பி வருவது கேவலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி ஜுவலர்ஸ்

## இடமாற்றம் அறிவித்தல்

இதுவரை இல. 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்

**11 - 06 - 1994** சனிக்கிழமை முதல் சற்று முன்பாக கஸ்தூரியார் வீதியில் (இல. 246) எனும் முகவரிக்கு

## ராணி நகையகம்

எனப் பெயர் மாற்றப்பட்டு இயங்கும் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்;
செ. இலட்சுமணன்.

[இ-8263]


## நாய்களுக்கு நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். மாநகராட்சி மன்றத் துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து போடப் பட்டு வருகிறது.

இன்று புதன்கிழமை ஊசி ஏற்றப்படும் இடங்கள் வருமாறு!

★ காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை குருநகர் சென். றோக் சனசமூக நிலையம், இராசசிங்கம் வீதி பாரதி சனசமூக நிலையம்.

★ காலை 10-30 மணி தொடக்கம் பிற்பகல் 12-30 மணி வரை, குருநகர் மீன் சந்தை, கண்டி வீதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்.

★ பிற்பகல் 2மணி தொடக்கம் மாலை 4மணி வரை, பழைய பூங்கா வீதி சுண்டிக்குளி சனசமூக நிலையம், இராசாவின் தோட்டம் அருள் மாதா சனசமூக நிலையம்.

(இ-17)

## தனியார் கல்வி நிறுவன கூட்டம் ஒத்திவைப்பு

இன்று நடைபெறவிருந்த யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் பொதுச் சபைக் கூட்டம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஒன்றியத் தின் தலைவர் அறிவித்துள்ளார்.

புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்த பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ 3)

## மரதன் ஓட்டப் போட்டி முதற்பரிசு ரூ.1 லட்சம்!

கொழும்பு, ஜூன் 8

வெளிநாட்டு வீரர்களும் கலந்து கொள்ளக் கூடியதான மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி ஒன்றை கொழும்பில் நடத்தவும் —

இதில் முதலாவதாக வரும் வீரருக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசு வழங்கவும் இலங்கை டயின் வைற் அமைப்பு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1995 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இம் மரதன் போட்டியில் 20 ஆயிரம் வீரர்கள் வரையில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா, நேபாளம், பூட்டான், பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு முதலான சார்க் நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இப்போட்டியில் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

## திருமலையில் வீடியோ திரைப்பட கொட்டகைகள் மூடுவிழா

திருகோணமலை நகரில் இயங்கிவரும் வீடியோ திரைப் பட கொட்டகைகள் அனைத் தும் இம்மாதம் 16ஆம் திக திக்கு முன்னர் மூடப்பட வேண்டும் என்று திருமலை நகரசபை அறிவித்துள்ளது.

வீடியோ கொட்டகைகளை மூடத்தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்றும் நகர சபை எச்சரித்துள்ளது.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று திருமலை நகர சபையின் அண்மையில் நிறை வேற்றப்பட்டது. (இ-எ)


## மகாபாரத தெய்வீகப் பேருரை

ஆனைக்கோட்டை சாவல்கட்டு ஞானவைரவ சுவாமி தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று (8-6-94) புதன்கிழமை முதல் 10 நாட்கள் நடைபெறும்.

★ தினமும் இரவு 8 மணி முதல்
மகாபாரதம் பற்றி தெய்வீக இலக்கியப் பேருரை
திரு. த. சிவகுமாரன்
(அமைப்பாளர் காரைநகர் சம்பில்கழகம்)
நிகழ்த்துவார்

— ஆலய தர்மகர்த்தா சபை.

(7437)



## திருமண விருந்துபசார அழைப்பு

அன்புடையீர்!
நிகழும்பவ வருடம் வைகாசித் திங்கள் 29 ஆம் நாள் (12-06-1994) ஞாயிற்றுக்கிழமை

| நடராசா நாகேஸ்வரன் | சங்கரலிங்கம் சுஜாதா |
|---|---|
| (நாகேஸ்) | (சாந்தி) |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

நடைபெறும் திருமணத்தைபொட்டி 13 - 06 - 1994 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசார வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு: திருமதி நடராசா

தற்போதைய முகவரி
ஆசாத் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

[31309]



உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பவ ஆண்டு வைகாசி மாதம் 27 ஆம் நாள் (10-06-1994) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணி தொடக்கம் பி. ப. 1 30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருவளர் செல்வி |
| இராசதுரை ஸ்ரீகுமார் (சிறீ) | செல்வி வாசுகி (சுகி) |
| [விஜயா ஹாட்வேயர்ஸ் மல்லாகம்] | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழையில் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை வாழ்த்தி, ஆசீர்வதிப்பதுடன் தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி சி. சத்தியமூர்த்தி
(விஜயா ஹாட்வேயர்ஸ்)
காளிகோவிலடி,
மல்லாகம்.

திரு. திருமதி அ. பத்மநாதன்
"குமரகோட்டம்"
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(இரு வீட்டார் அழைப்பு)

[7227]



## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





| வினாயகமூர்த்தி சதாசிவம் | சதாசிவம் சிவானந்தமூர்த்தி |
|---|---|
| [இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்] | |
| அன்னையின் மடியில்: 04 – 02 – 1922 | அன்னையின் மடியில்: 04 – 05 – 1953 |
| தரணியின் மடியில்: 05 – 06 – 1986 | தரணியின் மடியில்: 11 – 03 – 1986 |

**திதி: 08-06-1994**

ஆண்டுகள் ஏழு மறைந்தாலும்
ஆறாத்துயரம் இன்னும் மறையவில்லை
மைந்தன் மறைந்த செய்திகேட்டு
மாதங்கள் மூன்றிற்குள் மறைந்த
தந்தையையும் மறப்போமா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்

முத்ததம்பியார் வளவு,
வதிரி, கரவெட்டி.


### தேர்தலில் யாரை ஆதரிப்பது?

## ஐ. ஐ. தே. முன்னணி விரைவில் முடிவு!

கொழும்பு, ஜூன் 8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது என்பது பற்றியதீர்மானத்தை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனது வருடாந்த மாநாட்டிலேயேமுடிவு செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னணியின் பொதுச் செயலாளரும் வடமேல் மாகாண முதலமைச்சருமான ஜி எம். பிரேமச்சந்திரா இதனைத் தெரிவித்தார். (இ-எ)

### பணிப்பாளர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தின் அடிப்படையில் இரண்டு குழுக்களாகச் சந்தித்தோம்.

#### கோரிக்கை ஏற்கப்பட்டது

சில பாடசாலைகளுக்கு இருநேரமாக இயங்குவதில் உள்ள சிக்கல்கள் இக்கூட்டங்களில் விளக்கப்பட்டன. அதனையடுத்து அப்பாடசாலைகள் ஒருநேரமாக இயங்க விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்கப்பட்டு அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

மற்றைய பாடசாலைகள் இருநேரமாக இயங்குவதற்குக் கேட்டன. அதனை தரிதமாக செயற்படுத்தும் படியும் அதிபர்களே கோரினர். எனவே அவர்களின் வேண்டுகோள் படிதான் இது செயற்படுத்தப் பட்டது.

இரு நேரப் பாடசாலை முறையால் ஏற்படக் கூடிய நன்மைகள் குறித்து விரிவாக ஆராய்ந்த பின்பே இம்முடிவு எடுக்கப்பட்டது.

எனவே இப்போது—வடக்கு வலயத்தில் — இது குறித்து பிரச்சினைகள் எழ நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை.

#### கருத்துகள் கவனிக்கப்படும்

எனினும் எமக்கு முன்வைக்கப்படும் கருத்துகளை சீர்தூக்கிப் பார்த்து ஆலோசித்து நல்ல முடிவு எடுக்கப்படும்.

நகர்ப்புற பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வடக்கு வலயப் பாடசாலைகளுக்கு இல்லை என்பதையும் நாம் உணர வேண்டும்.

எனவே சம்பந்தப்பட்டோர் எமது நல்ல முடிவை தொடர்ந்து செயற்படுத்த ஒத்துழைப்புத் தரவேண்டும்- என்றார்.

இதேவேளை—

வடக்கு வலயத்தில்—

புத்தூர், இடைக்காடு, நீர்வேலி பகுதிகளிலுள்ள — இருநேரமாக இயங்கும் பாடசாலைகளில்—இவற்றில் நேற்று பிற்பகலில் உயர்தர வகுப்பு மாணவர்கள் வகுப்புகளுக்கு வருகை தரவில்லை.

மற்றும் சில பாடசாலைகள் ஒரு நேரமாக நேற்று இயங்கின. (உ-3)

## பதவி துறப்பும் பதவி ஏற்பும்

கொழும்பு, ஜூன் 8

நாடாளுமன்றத்தில் நேற்று பொதுமக்கள் கலரியில் மக்கள் நிறைந்து காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.க தேசியப்பட்டியல் எம் பி. ஆர். ஏ. டி. சிறிசேனவின் பதவி துறப்புப் பேச்சைக் கேட்கவும்--

பதவி விலகிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் இடத்துக்கு நியமிக்கப் பட்ட சட்டத்தரணி யூ. எல். எம். முகைதீனின் பதவி ஏற்பு நிகழ்ச்சியைக் காணவுமே அவரவர்களின் ஆதரவாளர்கள் கலரியில் நிறைந்து காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## தென்மராட்சியில் வணிக பாட போட்டி

தென்மராட்சி, ஜூன் 8

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் 9, 10, 11 ஆம் ஆண்டுகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையே வணிக பாடப் போட்டிகளை பாடசாலை மட்டத்திலும், கோட்டமட்டத்திலும் விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆண்டு 9, 10 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு குறுவினாப் போட்டிகளும் ஆண்டு 11 இல் பயிலும் மாணவர்களுக்கு வணிக பாடத்தில் கட்டுரையும், கணக்கியல் திறன் பரீட்சையும் நடத்தப்படவுள்ளன. (எ-117)

### சு.க. தலைமை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்காவின் வாசஸ்தலத்தை முற்றுகையிட முற்பட்டனர் எனவும் ஏற்கனவே செய்திகள் வெளியாக இருந்தன என்பது தெரிந்ததே. (ஒ-எ)


அளவெட்டி பெருமாக்கடவைப் பிள்ளையார் கோயில்

## பவ வருட மஹோற்சவம் - 1994

| | |
|---|---|
| கொடியேற்றம் | - 14-06-1994 செவ்வாய்க்கிழமை காலை 11 மணி. |
| தேர்த் திருவிழா | - 22-06-1994 புதன்கிழமை காலை 11 மணி. (எம்பெருமான் தேரில் எழுந்தருளும் நேரம்.) |
| தீர்த்தத் திருவிழா | - 23-06-1994 வியாழக்கிழமை காலை 11 மணி. |
| ஏனைய திருவிழாக்கள் | - காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை. |
| இரவு | - மாலை 3 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை. |

(7226) பரிபாலன சபை.



## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை தில்லையம்பலம்

தொண்டமனாற்றைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தில்லையம்பலம் (ஓய்வு பெற்ற உள்ளூராட்சி இறைவரி பரிசோதகர்) 06-06-1994 அன்று மாலை சிவபதம் அடைந்தார்,

இவர் செல்வச் சந்நிதி கோயில் சந்தனம் கொடுக்கும் 'தில்லையம்பலம் ஞாபகார்த்த திருப்பணிச்சபை'' ஸ்தாபகரும், முருகபக்தருமாவார். அன்னார் இராசேஸ்வரியின் அன்புக்கணவரும் திரு. முருகதாசனின் (Acct வீடமைப்பு அதிகாரசபை, மன்னார்), அன்புத்தந்தையும், ஜெபசிறியின் அன்பு மாமனும், சிவசுதன், திருவேரகன் அவர்களின் அன்புப் பேரனாருமாவார் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராசேஸ்வரி தில்லையம்பலம்.

தொத்தியாடு,
தொண்டமனாறு.

(31301)

### சேனாதிராஜா நாகேந்திரராஜா

(லெப் சுதன் ஒப்பிலான்)

தொட்டிலடியை வசிப்பிடமாகக் கொண்ட சேனாதிராஜா மங்களேஸ்வரி அவர்களின் புதல்வன் நாகேந்திரராஜா(லெப். சுதன்-ஒப்பிலான்) நேற்று முன்தினம் (6-6-94) வீரச் சாவைத்தழுவிக் கொண்டார்.

இவர் வசந்தா, மகேந்திரராஜா, தருமராஜா குலேந்திரராஜா (சேனாசன்ஸ்), காலஞ்சென்ற போகராஜா, ரவீந்திரராஜா (ரவி) (தொழில் நுட்பக்கல்லூரி கொக்குவில்),திருப்பதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும் .

தகவல்:
திருப்பதி (சேனாசன்ஸ்)
(சகோதரன்)

இராஜபவனம்,
சண்டிலிப்பாய் வடக்கு.

[சி/8418]

### அப்பாக்குட்டியர் பொன்னம்பலம்

(இணுவில்)

இணுவிலைச் சேர்ந்த அப்பாக்குட்டி பொன்னம்பலம் (இலங்கை பெருந்தோட்ட வேலை கொள்வோர் சமாஜத்தின் (Ceylon Estates Employers Federation-Kollupity) கணக்குக் கிளையின் முன்னைநாள் பொறுப்பாளரும், கொழும்பு விவேகானந்த சபையின் முன்னைநாள் கௌரவ ஸ்தாபனக் காரியதரிசியும் (Establish--ment Secretary) 07 - 06 - 1994 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், சித்த வைத்தியரும், இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையின் (தற்பொழுது இணுவில் மத்திய கல்லூரி) ஸ்தாபகருமான அப்பாக்குட்டியர் - விசாலாட்சி தம்பதிகளின் புதல்வனும், பஞ்சாட்சரம், மங்களேஸ்வரி, சிவராசா (மின்னிலையப் பொறுப்பதிகாரி, ஓமான்), இராசலெட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம், முருகையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான அழகேசு (சித்த வைத்தியர்), சடையப்பிள்ளை (முன்னைநாள் பிரதம இலிகிதர், காவல்துறை), அன்னப்பிள்ளை, ஞானேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், கனகசபாபதி (ஆசிரியர், இணுவில் இந்துக்கல்லூரி), இலங்காதேவி (இளைப்பாறிய ஆசிரியை), காலஞ்சென்றவர்களான Dr. சுப்பிரமணியம், சண்முகவடிவு (ஆசிரியை) ஆகியோரின் மாமனாரும், Dr பிரேமலதா (ஐக்கிய அமெரிக்கா), ரஜனி, கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), கௌசலா (பிரான்ஸ்), சாந்தினி (டுபாய்), பத்மலோஜினி (லண்டன்), வாசவன் (அவுஸ்திரேலியா), ரோகினி (பேராதனை), சுதன் (லண்டன்), ஹரிகரன் (லண்டன்), வேணுகோபிகரன் (கொழும்பு], ஹர்சன் [கொழும்பு], வேணுகானன் (யாழ் இந்துக்கல்லூரி], வீணா (உடுவில் மகளிர் பாடசாலை), கெங்கா, வித்தியா ஆகியோரின் பேரனும், காஜந்தினி [ஐக்கிய அமெரிக்கா], மீனாட்சி [ஐக்கிய அமெரிக்கா], நித்தியராம் நாராயணன் (யாழ். இந்துக்கல்லூரி], தனசிராம் நாராயணன், சங்கரராம் நாராயணன், ஆரணி [பிரான்ஸ்], அருணன் [பிரான்ஸ்) ஸ்ரீலக்ஸ்மன் [லண்டன்], ஸ்ரீஇராமன் [லண்டன்], இலட்சுமி [டுபாய்], ஆரபி [பிரான்ஸ்), வாசவன் மைந்தன் [அவுஸ்திரேலியா] ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்ற ஓவசியர் கந்தையாவின் மருமகனும், காலஞ்சென்றவர்களான காட் குருசுவாமி, வத்தகாமம் செல்லப்பா, நடராசா (உபதபால் அதிபர்], அன்னலெட்சுமி, சிவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று [08 - 06 - 1994] புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தகனக் கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பொ: பஞ்சாட்சரம்
[மகன்]

மஞ்சத்தடி,
இணுவில்.

[31315]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) [illegible] வீதி, 292/2 இல் [illegible] 08-06-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org